DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.15/2024**

Deposition of witness for Prosecution அ.சா.7

Name : செல்வி
Father/ Husband Name : வெள்ளைச்சாமி
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 25.09.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது தேவகோட்டையில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். கடந்த 25.11.2023-ம் தேதி மாலை 05.00-05.30 மணியளவில் தில்லைநகர் பக்கத்தில் உள்ள என் தங்கை வீட்டிற்கு சென்றிருந்தேன். அப்போது வெளியில் திருடன் திருடன் என்று சத்தம் கேட்டது. நாங்கள் போய் பார்த்த போது அ.சா.1னின் ஆட்டை ஒருவர் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தார். சத்தம் கேட்டவுடன் அந்த நபர் ஓடிவிட்டார். பிறகு ஆஜர் எதிரி அந்த இடத்திற்கு அசிங்கமான வார்த்தைகளை பேசிக் கொண்டு வந்து 2ஆடுகளை கையால் காலை பிடித்து தூக்கி அடித்ததில் 2 ஆடுகளும் மயங்கிவிட்டது. அப்போது அ.சா.1 காலை பிடித்து அதை தடுக்க போன போது அ.சா.1யை கீழே போட்டு எதிரி கையால் முதுகில் நன்குநன்கு என்று குத்தினார். அதில் அ.சா.1 மயக்கம் அடைந்துவிட்டார்.

2. பிறகு அருகிலிருந்தவர்கள் ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி அ.சா.1யை அதில் ஏற்றி அனுப்பினோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சம்பவத்தன்று நான் என் தங்கையை பார்க்க சென்றிருந்தேனா அல்லது அதற்கு முந்தைய நாள் சென்றேனா என்றால் சம்பவத்தன்று காலை என் தங்கைக்கு குழந்தை பிறந்திருந்ததால் பார்க்க

சென்றிருந்தேன். என் தங்கையின் பெயர் மகாலெட்சுமி. மகாலெட்சுமி வீட்டிற்கு தான் நான் போய் இருந்தேன். நான் போலீசாரின் விசாரணையில் என் தங்கை இராஜேஸ்வரி வீட்டிற்கு சென்றதாக சொன்னேனா என்றால் இல்லை. சண்டை நடந்த இடத்திற்கும் என் தங்கையின் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்குமென்றால் சுமார் 1/2 கி.மீ தூரம் இருக்கும்.

2. என் தங்கையை அடித்தவரின் பெயர் தெரியுமா என்றால் என் தங்கையை யாரும் அடிக்கவில்லை. அ.சா1யை அடித்தவரின் பெயர் எனக்கு சம்பவத்திற்கு முன்பு தெரியாது. அ.சா.1 எனக்கு உறவினர் இல்லை. சண்டை நடந்தன்று நான் என் தங்கை மகாலெட்சுமி வீட்டில் தான் இருந்தேன். சண்டை நடக்கும் போது அருகில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் நிறைய பேர் இருந்தார்கள். ஆட்டை பிடித்தவரின் பெயர் தெரியாது. ஆட்டை மேய்த்த இடம் யாருக்கு பாத்தியப்பட்ட இடம் என்று எனக்கு தெரியாது, அது வெறும் பொட்டல் இடம்தான்.

3. நான் அ.சா.1னின் சத்தம் கேட்டு தான் சென்று பார்த்தேனா என்றால் ஆமாம். நான் போய் பார்ப்பதற்கு முன்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் போய் பார்ப்பதற்கு முன்பு யார் என்ன பேசிக் கொண்டார்கள், யார் அடித்துக் கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் எனக்கு சம்பவம் நேரடியாக தெரியாது என்றும், அ.சா.1வும் என் தங்கை மகாலெட்சுமியும் பழக்கமானவர்கள் என்பதால் என் தங்கை கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை :**</u> இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.